# இயல் - 7
# முடிவுரை

ஆண்டாள் பிரியதர்ஷினியின் படைப்புக்கலை என்னும் தலைப்பில் அமைந்த இவ்ஆய்வில் கீழ்க்காணும் முடிவுகள் கண்டறியப் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கிய எழுத்தாளரான ஆ.பி. சமகால வாழ்வினை புதினங்களாக்கியுள்ளார். இக்கால மக்களின் வாழ்வியல் போக்குகளையும், மாற்றங்களையும் படைப்பில் பதிவாக்கியிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கன. விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் தாக்கம், கல்வியின் பரவல், தனிக்குடும்பம், சமூகம் ஆகியவற்றை ஆசிரியர் அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளார்.

பொதுவாக புதினப் படைப்பாளிகள் சமுதாயத்தின் ஒட்டுமொத்த நடப்பையும் மாற்றுச் சக்தியையும் கூர்ந்து கவனிப்பதில் தான் அவர்களுடைய படைப்பு அமைந்திருக்கும். அந்த வகையில் ஆ.பி.யின் புதினக்கரு சமுதாயம் சார்ந்ததாக உள்ளது. சமுதாயத்தில் நிகழும் நிகழ்வு சிக்கல், அதன் தீர்விலும் ஆசிரியர் அதிக ஈடுபாடு கொண்டுள்ளார்.

படைப்பாளிக்குப் படைப்புச்சூழல் தலையாய ஒன்று. ஒவ்வொரு படைப்பும் ஏதாவது ஒரு நோக்கத்தினை மையமாகக் கொண்டமையும் ஆ.பி.யின் படைப்பு அவருடைய உடன்பாட்டுச் சிந்தனையை வலியுறுத்துவதாக உள்ளது. படைப்புச் சுதந்திரம், படைப்பாளி தன்

மனதைப் பொறுத்து அமையும் பாங்கு மிளிர்வதை இவ்வாய்வு சுட்டியுள்ளது. அழகியல் பார்வை கொண்ட இவர்தம் ஆளுமைத்தன்மை பெண்படைப்பாளிகளுன் தனித்துவம் மிக்கதாம்.

ஆ.பி.யின் புதினங்கள், இளைஞர் சமுதாயம், பெண் விடுதலை, ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைப்பாட்டை முதன்மையாகக் கொண்டிலங்குவதாக உள்ளன. பெண்களின் சிக்கலுக்கு முதலிடம் அளித்து பல புதினங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஆ.பி.யின் கதைக்களத்தேர்வு, பாத்திரங்கள் நிகழ்வுகள் நெறிபட அமைத்திருப்பதை பரவலாகக் காணமுடிகிறது. கதைக்களம் அயல்நாடு வரை சென்றாலும், ஆசிரியர் தனக்குரிய நடையில் நெல்லை மற்றும் சென்னை போன்ற இடங்களை மையமாகக் கொண்டுள்ளார். கதைமாந்தர்கள் வாழ்க்கையின் நீண்ட தொலைவுக்குச் செல்லும் பயணத்தை மேற்கொண்டாலும் தமிழ்ச் சூழலமைவுகளை வெளிப்படுத்துபவர்களாக அமைத்துள்ளனர். களத்தையும், கதை மாந்தரையும் இலக்கியப்படுத்துதலே இவரின் புதினங்கள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் துல்லியமான தகவல்களையும் கொடுப்பது இவரது களத்தேர்வு நெறிமையாக உள்ளது. பெண்களுக்குரிய வாழ்க்கை வழித்தடத்தைக் காட்டும் களங்கள் ஆ.பி.யிடம் அதிகம்.

பெண்கள் தங்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களை ஏற்றுக் கொண்டு அவற்றை எதிர்த்துப் போராடும் துணிவினை ஆ.பி. புதினங்கள் அடையாளப்படுத்துகின்றன.

பெண்ணடிமை, ஆணாதிக்கம் இவர்தம் பல புதினங்களுள் இடம் பெற்றுள்ளன. தனிமனித இரக்கவுணர்வு, சுதந்திரமற்ற சூழ்நிலை,

அரசியல்நிலை, வறுமைநிலை, தொழிலாளர் நிலை, காதல் நிலை, ஆகியவற்றை ஆ.பி. தகனம் உள்ளடக்கியுள்ளது.

குடும்பத்தில் பெண்களுக்கு ஏற்படும் அவல நிலை நீங்க வேண்டும். பெண்களுக்கு நிகழும் கொடுமைகள் களையப்பட வேண்டும். பெண்மை நலத்திற்குத் தீர்வு காணும் நோக்கில் அழுத்தமான கருத்துகள் அமைந்த ஆ.பி.யின் புதினங்கள் பெண் சமூகத்திற்கு நம்பிக்கையூட்டி உள்ளன.

சமூகத்தில் பெண்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடு, அடக்குமுறை, அடிமைநிலை, ஆணாதிக்கமுறை, அலுவல் செல்லும் மகளிர் படும் துன்பங்கள், வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கும் பெண்களின் துன்பங்கள் குறித்த செய்திகள் இவரது புதினங்கள் வழி புலனாகின்றன.

சிக்கல்களை எதிர்கொள்ளும் துணிவு, அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் திறன், விழிப்புணர்வு பெறுதல், பிறபெண்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுதல் ஆகிய பெண்ணியச் சிந்தனைகளை இவரது புதினங்கள் மையப் பொருளாகக் கொண்டுள்ளன.

“கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்” என்ற பழமைவாதம், அடிமைக்கோட்பாடு தகர்த்தெறியும் தீவிரவாதப் புதினங்களாக சில விளங்குகின்றன.

சமூக நிறுவனங்களால் பெண்கள் அடிமைச் சூழலில் சிக்கித் தவிக்காமல் அதனின்று விடுபட ஆ.பி. விரும்புகிறார் என்பதைச் சுட்டும் போதும் பெண்கள் தனித்து நின்று தன்னம்பிக்கையுடனும் துணிவுடனும் வாழ முடியும் என்ற பெண்ணியக் கருத்தாக்கத்தை இவர்தம் ஒன்பது புதினங்களுள் பதிவாக்கியுள்ளார்.

ஆணாதிக்கப் போக்கும் பெண்ணடிமைத் தனமும் குடும்ப நிறுவனங்களில் முற்றிலுமாக மாறும் போது, சமத்துவத்துக்கு ஆ.பி. ஏங்குகிறார்.

கணவன் கொடுமைக்காரனாக இருக்கும் நிலையில் அவனைத் திருத்த வேண்டும், முடியாத சூழ்நிலையில் அவனை விட்டு விலக வேண்டும் எனச் சுட்டுவது தீவிரவாதமாகத் தெரிந்தாலும் ஆ.பி. சமதர்மப் பெண்ணியத்தை வலியுறுத்துகிறார் எனலாம்.

பெண்களே பெண்களுக்குக் கொடுமை செய்யும் நிலை பெண் சமூகத்தை இழிவுபடுத்தும் நிலைக்கு இட்டுச் செல்லும் போக்கினை ஆ.பி. கோடிட்டுக்காட்டுவது படைப்பாளியின் நேர்மையாகும்.

பெண் உழைப்பைச் சுரண்டி வாழும் பெற்றோர் செயலை வெறுத்து அவர்களின் குடும்ப அமைப்பிலிருந்து விலக வேண்டும் என்பது சமூக அதிர்வாகலாம்.

பெண் என்பவள் ‘போகப் பொருள்’, ‘விளம்பரப் பொருள்’ என்ற கருத்து ஆண்கள் மனதிலிருந்து விலக வேண்டும். அப்போது தான் சமூகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் இரட்டைப் பணிச் சுமையைக் குறைக்க கணவனும் குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து இல்லறப் பணிகளை ஏற்றுக் கொண்டு பங்கீடு செய்வதன் வழிப் பெண்களுக்குரிய பணிச்சுமையை வீட்டில் குறைத்திட வேண்டுகிறார்.

மாற்றாளுடன் வாழ்ந்த ஆடவனை விரும்பி மகளிர் ஏற்கக் கூடாது. அவனை விட்டு விலக வேண்டும் என ஆசிரியர் தீர்வு கூறுகிறார்.

குழந்தைகளுக்கு வேண்டியது அன்பும் அரவணைப்பும் தான், குழந்தைகளுக்கு முழு நேரப் பராமரிப்பை மகளிர் தரவில்லை என்றாலும், சிலமணி நேரமாவது ஒதுக்கிட வேண்டுகிறார்.

சமுதாய உண்மைகளை வெளிப்படுத்துவதில் புதின இலக்கியம் சிறந்து விளங்குகிறது. இளமைத் திருமணம், கல்வி, விதவைக்கொடுமை, வரதட்சணை, இயந்திரவாழ்க்கை, வறுமை, பொருளாதாரநிலை, சமுதாய சீர்கேடு, தலைமுறை இடைவெளி பெண்ணடிமை, நம்பிக்கைகள், பழக்கவழக்கம் முதலியன ஆ.பி.யால் சித்திரிக்கப் பெற்றுள்ளன. சமுதாயச் சிந்தனைகளைத் தெளிவாகவும் ஆழமாகவும் இவர் வெளிப்படுத்தியுள்ளார். பழமையை முழுவதும் சாடாமல் அதே நேரம் புதுமையைக் கண்மூடித் தனமாக ஏற்காமல் இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து புலப்படுத்தியுள்ளார்.

திருமணம் என்ற சூழல் தருகின்ற சிக்கல்கள் தான் பெண்ணுக்கு அதிகம். திருமணச் சூழல் மாற வேண்டும். வரதட்சணைக் கொடுமை ஒழிய வேண்டும், திருமணச் செலவை இருவீட்டாரும் ஏற்றுக் கொள்ள ஆ.பி. வழியமைக்கிறார்

வெட்டியான் தொழில் செய்யும் பெண்கள் இன்னும் வளர்ச்சியடையாமல் வறுமை என்னும் கொடிய நோய்க்குப் பலியாவதைக் கோடிட்டுக்காட்டியுள்ளார்.

ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண் முழு உரிமையும் கிடைக்கப் பெற்றவளாகவும் சமுதாயத்தில் அதற்கான அங்கீகாரம் உண்டு என்பதை உணர்ந்தவளாகவும் ஆணுக்குப் பெண் எந்த நிலையிலும் தாழ்ந்தவள் அல்லல் என்ற நிலையை ஆசிரியர் புதினங்களில் காட்டுகிறார்.

பெண்களுக்கு குடும்பத்தில் மட்டும் பங்கு உண்டு என்ற நிலை மாறி, சமூக உற்பத்தியிலும் அவள் பங்கு பெற வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. பெண் விடுதலை, பெண் உரிமை போன்றவற்றையும் ஆசிரியர் எடுத்துகூறியுள்ளார்.

ஆ.பி.யின் புதினங்களுள் இன்றைய சமுதாயச் சிக்கல்களான தீண்டாமை, மூடநம்பிக்கை, முதலாளித்துவ நிலை தொழிலாளர்களின் அவலத்தைச் சாடும் போக்குகள் பொதிம்பியுள்ளன.

மனித நேயம், சமய நல்லிணக்கம் போன்றவை மனிதர்களுக்குள் வேண்டும் என்று ஆ.பி. கூறும் கருத்துச் சிறப்புக்குரியது. அரசியல் ஊழல், இன்றைய கல்வி காதல், மூடநம்பிக்கை, இளைஞர்களின் திரைப்பட மோகம் இன்றைய இளைஞர்களின் போக்கினை ஆ.பி. படம் பிடித்துக் காட்டுகின்றார். சமூக மாற்றம் காண விழையும் இவர் சிந்தனை முயற்சி, விழிப்புணர்ச்சியை முன்னிறுத்தியுள்ளார்.

பெண்கள் சமூகத்தில் தனித்து வாழ முற்படும் போது பலவிதமான கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். வரதட்சணை, மறுமணம், முதிர்கன்னி போன்ற பல நிலைகளில் பெண்கள் இன்றும் சமுதாயத்தால் பாதிப்புக்குள்ளாவதை ஆ.பி. புதினங்களுள் வெளிப்படுத்தியுள்ளார்.

உழைத்து உடலாலும் உள்ளத்தாலும் தேய்ந்து போகும் பெண் பொருளாதாரச் சுதந்திரம் அற்றவளாகவே காட்டப்படுகிறாள். இந்நிலை மாற, வேலை செய்யும் பணி மகளிரின் நிலையைப் புரிந்து குடும்பத்தில் வீட்டுப் பணிகளை மறுபங்கீடு செய்வதுடன், பொருளாதாரச் சுதந்திரமும் வழங்க வேண்டுமென ஆ.பி. புதினங்கள் உணர்த்துகின்றன.

ஆண்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் தீவிரவாத நிலைக்கு பெண்கள் செல்வதைக் காணலாம். இது அவர்களுடைய அறிவின் காரணமாக ஏற்பட்ட ஒன்று. மேலும், தங்களுக்குரிய பல்வேறான உரிமைகளைப் போராடிப் பெறத் தொடங்கி விட்டனர். அலுவல் சார்ந்த மகளிர் உடலியல் நிலையில் மாறத் தொடங்கியுள்ளனர்.

ஆ.பி. தன்னுடைய புதினங்களில் கதை மாந்தர்களை நடப்பியல் நோக்கில் படைத்து சமூகத்தில் விரவியிருக்கின்ற மேல் வர்க்கத்தினர், பதவி வெறியர்கள், சுயநலவாதிகள் போன்றோரைச் சுட்டுவதில் மார்க்சிய வெளிப்பாட்டைக் காணலாம்.

ஆ.பி. புதினங்களில் வாசகர்கள் கதையோடு ஒன்றும் படியாய் உத்திகள் கையாளப்பெற்றுள்ளன. கதைத் தொடக்கம் வருணனை, நேரடித் தொடக்கம் முடிவு போன்ற முறைகளில் அமைந்து வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டுவனவாக உள்ளன.

கதைமுடிவுகள் வருணனையுடனும் துன்பியல் முடிவாகவும் அமைந்து வாசகர்கள் சிந்தனையை வளரச் செய்வனவாக அமைந்துள்ளன. புதினங்களின் தலைப்புகள் கதைக்கருவை விளக்கும் வகையில் அமைந்து வாசகர்களின் எண்ணத்தை ஈர்ப்பனவாக உள்ளன.

மேலும் புதினங்களில் உரையாடல், பின்னோக்கு உத்தி, கடித உத்தி, கனவு உத்தி, மொழிநடை, நாட்டுப்புறப்பாடல்கள் பயன்பாடு, தத்துவக்கருத்துகள், எடுத்துரைப்பு உத்தி, அங்கத உத்தி, பிறமொழிக்கலப்பு நடை ஆகியவை கலந்த நிலையில் புதின அமைப்பிற்கு உரம் சேர்ப்பனவாக அனைத்து புதினங்களும் பாங்குடன் அமைந்துள்ளன.

கற்பனையாக இல்லாமல் வாழ்வின் உண்மையான நடப்பியலைக் காட்டும் புதின வகைகளுள் ‘தகனம்’ சிறப்பிடம் பெறுகிறது.

மாணவர்களின் நிலையைப் பற்றி எடுத்துரைக்கும் போக்கில் ‘விலை’ புதினம் சிறப்பிடம் பெறுகிறது.

சிகரங்கள் உயரங்கள் இல்லை முனைப்பு இருந்தால் சிலந்திக்கும் எட்டும் என்பதை சிகரம் சிலந்திக்கும் எட்டும் என்ற புதினம் சுட்டிக்காட்டுகிறது.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் மீட்டுருவாக்கமாக ‘சுருதி பிசகாத வீணை’ புதினத்தின் கதை பின்னப்பட்டுள்ளது.

சூரியோதயம் இல்லாத வெட்டியான் மக்களின் வாழ்வில் அகல் வெளிச்சமாவது கிடைக்க வேண்டும். மாறாக மயானங்கள் அனைத்தும் மின் மயானங்களாக மாறுகின்ற போது இவர்கள் வாழ்க்கைக் கேள்விக்குரியதாகும் போதே அவர்கள் வாழ்வு மீட்கப்பட வேண்டும். சமூகப்போக்கின் தொலைநோக்குச் சிந்தனையை ஆதங்கத்தைக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக ஆ.பி.யின் ‘தகனம்’ புதினம் முன்மொழிகிறது.

எவ்விதப் பேராசையும் இல்லாமல் பாமரத்தனமாக வாழும் வெட்டியான் இன மக்களை, மேம்படச் செய்வதில் சமுதாயம் கவனம் செலுத்த வேண்டும் என்பதே படைப்பாளியின் நோக்கம்.

வாழ்க்கையில் பிடிப்பும் இலட்சியமும் தேவை என்பதை ஆ.பி. புதினங்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆ.பி.யின் ஒன்பது புதினத் தொகுப்புகள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றுள்ளன. இவருடைய ஒவ்வொரு படைப்பினையும்

அனைத்துத் தளங்களிலும் தனித்தனியாக ஆய்வு செய்ய வேண்டும். ஆ.பி. புதினங்களை பிற புதின ஆசிரியர்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் போது படைப்பாளரிடம் மறைந்திருக்கும் தனித்திறமைகளை வெளிக்கொணரலாம்.

ஆ.பி. கவிதை, சிறுகதை, கட்டுரைகளை எடுத்துக்கொண்டு ஆய்வு நிகழ்த்தலாம். ஆ.பி.யின் ஒட்டுமொத்தப் படைப்புகளையும் சமூக, உளவியல், பெண்ணிய, தலித்திய, மார்க்சிய நோக்கில் ஆராயலாம். உளவியல் மற்றும் பெண்ணிய நோக்கில் ஆண், பெண் கதை மாந்தர்களைத் தனித்தனியே ஆய்வு செய்யவும் இடம் தந்து நிற்கிறது இவ்வாய்வேடு. ஆ.பி. படைப்புகளை பிறபடைப்பாளிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இன்னும் பல அரிய செய்திகள் வெளிவரும். ஆண்டாள் பிரியதர்ஷினி குறித்த எதிர்கால ஆய்வுகளுக்கு இவ்வாய்வோடு வழித்துணையாகும்.